# மூன்றாம் விபூதி

ஸ்ரீ. உப. வித்வான் வில்லிவலம் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி,

ஸ்ரீ அஹோபில மடம், முக்கூர்

(45-ஆம் பட்டம் அழகியசிங்கர், பூர்வாசிரமத்தில் அருளியது)

வாசகர்கள் இந்தத் தலையங்கத்தைக் கண்டதுமே, "சைவ சமயத்தவர் அணிந்துகொள்ளும் திருநீறு" பற்றி இங்கு ஏதோ எழுதப் போவதாக நினைப்பார்கள். அதில் முதல் தரமான திருநீறு, இரண்டாம் தரமான திருநீறு, மூன்றும் தரமான திருநீறு என்று பிரிவுகள் இருக்கலாம் அல்லவா? உலகிலும் "விபூதி" என்ற சொல் திருநீறு (பஸ்மம்) என்ற பொருளில் தானே பெரும்பாலும் வழங்குகிறது? ஆகவே அவர்கள் அவ்வாறு நினைக்கக் காரணமும் உண்டு. ஆனால் இங்கு அதுபற்றி எழுதப்போவதில்லை. பின் சற்று நில்லுங்கள்; கவனியுங்கள்; கருத்தில் கொள்ளுங்கள்.

ஸம்ஸ்கிருத வழக்கில் "விபூதி" என்ற சொல் ஐச்வர்யத்தைக் குறிக்கும். "விபூதி:, பூதி:, ஐய்வர்யம்" என்ற சொற்கள் சொத்து (ஐச்வர்யம்) என்ற ஒரு பொருளைக் குறிப்பதாக நிகண்டு காட்டுகிறது. ஆகவே இதன்படி விபூதி என்பது ஐச்வர்யத்தை (சொத்தை)க் குறிப்பதாகக் கொண்டு இந்தக் கட்டுரை பிறக்கிறது. பகவானுடைய விபூதியை -ஐச்வர்யத்தை - சொத்தைப் பொதுவில் இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர். ஒன்று, நித்ய விபூதி; மற்றொன்று, லீலா விபூதி.

நித்யவிபூதியாவது--"எம்பெருமானை எப்பொழுதும் இடையீடின்றி சாக்ஷாத்தாகக் கண்டு களிக்கும் நித்யர்களும் முக்தர்களும் அடங்கிய அப்ராக்ருதமான சுத்த (ரஜஸ் - தமஸ் கலவாத) ஸத்துவமயமான ஸ்வயம்ப்ரகாச த்ரவ்யத்தால் ஆன ஸ்ரீவைகுண்ட லோகம். இதற்கு என்றும் அழிவில்லாமையால் இதை நித்யமான விபூதி--ஐச்வர்யம் என்கின்றனர்.

லீலாவிபூதியாவது--தம் தம் புண்யபாபங்களுக்கு ஏற்ற வகையில் ஸுகதுக்கங்களை அநுபவிக்கும் நான்முகப் பிரமன் முதலாகப் புல் இறுதியாக உள்ள ஜீவராசிகளைக் கொண்ட ஸத்துவ--ரஜஸ்--தமோ மயமான ப்ரக்ருதி த்ரவ்யத்தினாலான இந்தப் பிரகிருதி மண்டலம். இந்த விபூதியினால் எம்பெருமானுக்கு லீலாரஸம் உண்டாவதனால் இதை லீலாவிபூதி என்கின்றனர். இந்த இரண்டு விபூதிகளைக் கொண்டேதான் எம்பெருமானை உபயவிபூதிநாதன் என்கிறோம். இந்த இரண்டு விதமான விபூதிகளைவிட மூன்றாவது விபூதி ஒன்று கிடையாது. இது நம்முடைய ஸித்தாந்தத்தில் ஸித்தமான விஷயம்.

இப்படி இருக்க, ‘மூன்றாம் விபூதி” என்ற கட்டுரை பிறக்க வழி இல்லையே என்று நினைக்கலாம். சாஸ்திரக் கொள்கைக்கு விரோதமில்லாமல் ஆழ்வார் காட்டிய அழகிய வழியிலே “மூன்றாம் விபூதி” நமக்குக் கிடைக்கிறது. அதுபற்றியே இந்தக் கட்டுரை.

திருப்புல்லாணி எம்பெருமான் விஷயத்தில் மிக்க ஈடுபாடு கொண்ட திருமங்கை யாழ்வார் தலைவித்தன்மையை அடைகிறார். அவனைப் பெறாமல் மிகவும் மெலிந்து நோவுபடுகிறார். இந்த நிலையில் பிறைச் சந்திரன், தென்றல் முதலியவற்றைக் கண்டு மிகவும் வருந்துகிறார். பிறை, தென்றல் முதலியன பிரிந்தாரை மிகவும் வருத்தும் பொருள்கள்; காமத்தைக் கிளரும் அவையாம். ஒரு புருஷனைக் காதலித்து அவனைப் பெறாத பெண்கள் மடல் ஊர்ந்து தன் காமத்தை உலகறியச் செய்து தார்மிகர்கள் மூலம் அவனைப் பெற முயலுவர். பனைமட்டைகளால் குதிரை போன்ற ஒரு வாகனம் செய்து அந்த மட்டைகளால் உடலை இரத்தம் சோரப் புண்படுத்திக்கொண்டு, தான் விரும்பும் புருஷனுடைய உருவம், பெயர், விலாஸம் முதலியன தாங்கிய படத்தைத் தொங்க விட்டுக்கொண்டு, பனை மட்டைகளால் ஆன அந்த வாகனத்தின் மீதமர்ந்து வீதியில் வருவதைத்தான் மடலூர்தல் என்பர் ஆன்றோர்.

ஆனால் பெண் இனத்தவர் இவ்வாறு மடலூர்தல் கூடாது என்பது தமிழர் மரபு. காமத்தை வெளியிடுவதில் பெண்களுக்கு ஆண்களுக்குப் போன்ற உரிமையைத் தமிழர் தரவில்லை. “கடலன்ன காமத்தராகிலும் மாதர் மடலூரார் மற்றையார் மேல்” என்று சட்டம் வகுத்துள்ளனர். “ஆனால் திருமங்கை மன்னன் இந்தச் சட்டத்தைத் தூக்கி எறிந்துவிடுகிறார். ஆண்களுக்குச் சமமான அந்தஸ்தை–நிலையை–அன்றே பெண்களுக்கு வழங்கியுள்ளார் வாள்வேலேந்தும் மங்கை மன்னன். தமிழர் மரபை அறியாமல் ஆழ்வார் இப்படிச் சொல்லவில்லை, செய்யவுமில்லை. அதைத் தெரிந்து வைத்துக்கொண்டேதான், அதைத் தாம் ஏற்கவில்லை என்கிறார். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? காமத்திற்கும் அதே நீதிதானே?

“மானோக்கின் அன்ன நடையார் அலரேச, ஆடவர் மேல் மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும் தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம். மின்னும் வட நெறியே வேண்டினோம்” என்று பெரிய திருமடல் என்ற திவ்யப் பிரபந்தத்தில் தமிழர்களின் தனி மரபைத் தகர்த்தெறிகிறார், இருந்தமிழ் நூற்புலவனாம் பரகாலன். கொண்ட காமத்தை முறையான நெறியில் வெளியிட யாவருக்கும் உரிமை உண்டு என்று, தலைவித்தன்மையை அடைந்த திருமங்கையாழ்வார் தாம் மடலூர்ந்து காட்டுவதாகச் சூள் உரைக்கிறார்.

ஆகவே, திருப்புல்லாணி எம்பெருமான்மீது கடல் போன்ற காதல் கொண்ட பரகால நாயகி அவனைப் பெற மடல் ஊர நினைந்து, பனைமரங்கள் அடர்ந்துள்ள ஒரு தோப்புக்குள் நுழைகிறாள். அந்தோ அங்கு அவளுக்குச் சோதனைமேல் சோதனையாக நேருகிறது. மடலூர மட்டைகள் எடுக்கப் போன பனந்தோப்பிலே பனைமரங்களிலே

அன்றிற்பறவைகள் குடிபுகுந்து இருந்து குரல் எழுப்பியவண்ணம் இருக்கின்றன. பிரிந்த நிலையில் இருக்கும் தலைவன்–தலைவிகளுக்கு அன்றிலின் குரல் மிக்க வேதனை தருவதாகும். அவர்களைக் கத்தியினால் அரிவது போலிருக்கும் அந்தக் குரல். இந்தப் பனந்தோப்பு வைத்தவர்களின் எண்ணம் வேறு; கடைசியில் நடந்தது வேறு. வழிப்போக்கர் தண்ணீர் அருந்திக் களைப்பாறட்டும் என்று தார்மிகர்களாய் இருப்பவர் நடுவழிகளில் தண்ணீர்ப் பந்தல் வைக்கின்றனர். அவர்களின் எண்ணம் நிறைவேறாத வகையில் அந்தத் தண்ணீர்ப் பந்தலிலே வழிப்பறிக்காரர்கள் வந்து பதுங்குகின்றனர். தண்ணிர்ப் பந்தலென்று நினைத்து அங்குத் தண்ணீர் அருந்திக் களைப்பாற வரும் வழிப்போக்கர் அங்குப் பதுங்கியுள்ள வழிப்பறிக்காரர்களின் கையில் சிக்குண்டு நவிவுபட்டுப் பொருளிழந்து செல்கின்றனர். அம்மாதிரியே ஆயிற்று இங்கு. தலைவனை அடைய விரும்பும் பெண்கள் மடல் எடுத்துப் பிழைக்கட்டும் என்று பனைமரங்கள் நட்டு வளர்த்த தோப்பில் அன்றிற் பறவைகள் வந்து குடி புகுந்தன. பிரிவாற்றாமல் மடல் எடுக்க அங்கு வந்த பெண்கள் கடைசியில் அங்குக் குடிபுகுந்துள்ள அன்றிலின் அரிகுரலுக்கு ஆளாகின்றனர். அந்தக் குரலைக் கேட்டு மிகுந்த துன்பத்திற்கு ஆளாகின்றனர். ஏற்கெனவே அடிபட்டுப் புண்ணாகியிருக்கும் இடத்தில் மேலும் எஃகின் துண்டு புகுந்தால் எப்படி இருக்கும்? அந்த நிலையை அடைகிறாள் பரகாலநாயகி. திருப்புல்லாணி எம்பெருமானை விரும்பிப் பெறாமையால் மனம் புண்பட்டுக் கிடக்கிறாள். அதில் எஃகின் துண்டு போல் அன்றிலின் அரிகுரல் பாய்ந்தது.

இத்தகைய தன் துன்பத்தைத் தோழியுடன் வாய்விட்டுக் கூறுகிறாள்–“பாவாய்! நல்ல என் தோழீ! நான் இப்படி நோவு படுவதற்குக் காரணம் ஒரு ஸமயம் பலவித மலர்களின் மணம் கமழும் திருப்புல்லாணி எம்பெருமானைக் கண்டு கைதொழுதேன். அவ்வளவுதான், அதுமுதல் அவனையே பெற விரும்புகிறேன் கிடைக்கவில்லை. வருந்துகிறேன்; அது தீர்வதற்கு மடலெடுக்க இந்தப் பனந்தோப்புக்குள் புகுந்தேன். அன்றிலின் குரலும் சேர்ந்து என்னே அரிந்து எடுக்கிறது. என்ன செய்வேன்! இப்படி எனக்கு வந்த நோய், உலகத்தவருக்கு வரும் நோய் போல் சில நாள் இருந்து தீரக்கூடியதன்று; உலகத்தவருக்கு வரும் நோயைவிட விலக்ஷணமானது. அது சில மருந்துகளால் தீரக் கூடியது; இது எம்பெருமானாலேயே தீரக்கூடியது. ஆகவே, அவன் கிடைக்குமளவும் இது இருந்தே தீரும், தோழீ! ஸ்ரீராமனை விட்டுப் பிரிந்த பரதனுக்கு உண்டான நோய் பதினான்கு வருஷ காலமும் மாறாமல் இருந்தாற்போல் எனக்கு உண்டான இந்த நோயும் எனக்கு நித்ய ஸ்வபாவமாகிவிட்டது போலும். என்ன செய்வேன்!” என்கிறாள். இந்த நோயில் பிறந்த நேர்த்தியான பாசுரம் இதோ–

காவார் மடற்பெண்ணை அன்றில் அரிகுரலும்

ஏவாயின் ஊடுஇயங்கும் எஃகின் கொடிதாலோ,

பூவார் மனங்கமழும் புல்லாணி கைதொழுதேன்,

பாவாய்! இது நமக்குஓர் பான்மையே ஆகாதே –பெரிய திருமொழி, 9-4-1.

மடல் எடுக்க மட்டைகள் எடுக்கப் போன இடத்தில் அன்றில் வந்து குடிபுகுந்து வருத்தியதுபற்றி முன் காட்டிய கருத்தை விளக்கும் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தியையும் அநுபவிப்போம்–'தார்மிகராய் இருப்பார் வைத்த தண்ணீர்ப் பந்தலிலே வழியடிக்காரர் ஒதுங்குமாப்போலே, மடலெடுத்தாகிலும் நட்ட பனையிலே அன்றில் வந்து கு டி புகு ந் த து." இதன் கருத்து முன்னமே விளக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேல். நான்காவது அடியில், "இது நமக்கு ஒர் பான்மையே ஆகாதே" என்ற பகுதிக்கு வியாக்கியானமாக அவதரித்த ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தியைத்தான் இங்கு நாம் நன்கு உற்று நோக்க வேண்டும். "மூன்றாம் விபூதி" என்று இங்குக் கொடுத்துள்ள தலைப்புக்குத் துணையாய் நின்ற இணையில்லாத ஸ்ரீஸூக்தி இது–"இது நமக்கோர் பான்மையே ஆகாதே–மாறாடி வருவதுமன்றிக்கே இது நித்ய ஸ்வபாவமாய் விட்டதன்றோ? நித்யஸூரிகள் நித்யானுபவம் பண்ணாநின்றார்கள். இவ்வருகுள்ளார் விஷயங்களிலே அந்யபரராகா நின்றார்கள். நோவுபடுகைக்கென்றே நம்மை மூன்றாம் விபூதியாகப் பண்ணிவிட்டதாகாதே! என்கிறாள்" என்று.

எம்பெருமான் திறத்தில் தனக்கு உண்டான நோய் நித்யமாகிவிட்டதே என்கிறாள் பரகாலநாயகி. இதனால் "மூன்றாம் விபூதி" ஒன்று கிடைக்கிறது. நித்யவிபூதியான ஸ்ரீவைகுண்ட லோகத்தில் இருக்கும் நித்யர்களும் முக்தர்களும் எப்பொழுதும் எம்பெருமானை அதுபவித்துக்கொண்டு எவ்விதத் துன்பமுமின்றி இருக்கிறர்கள். இப்படிப்பட்டவர்கள் நித்யவிபூதியைச்சார்ந்தவர்கள். லீலாவிபூதியான இந்தப் பிரகிருதி மண்டலத்தில் இருப்பவர்கள் பாமரர்கள் எம்பெருமானை அறவே மறந்து சப்தாநுபவம் முதலான சிற்றின்பங்களிலேயே ஈடுபட்டு நிம்மதியுடன் இருக்கிறார்கள். இவர்கள் லீலாவிபூதியைச் சார்ந்தவர்கள். நானும் என்னைப் போன்றவர்களும் நித்யமுக்தர்களைப் போல் எம்பெருமானுடைய பரிபூர்ணாநுபவம் கிடைக்கப்பெற்று வருத்தமின்றி இருக்கமுடியவில்லை. லீலாவிபூதியிலுள்ள பாமரர்களைப் போல் அறவே அவனே மறந்தொழிந்து "அல்ப விஷயங்களையே அநுபவித்துக்கொண்டு நிம்மதியாக இருக்கவும் முடியவில்லை. இப்படி இரண்டும் கெட்ட நிலையிலுள்ள நர்ம் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள்? பரிபூர்ணாநுபவம் கிடைக்காமையால் நித்யவிபூதியையும் சார்ந்தவர்கள் அல்லோம்: பாமரர்களைப் போல் அவனை அறியாமல் அல்பஸாரங்களையே சுவைத்து வாழவும் பெற்றிலோம். ஆகையால் லீலாவிபூதியையும் சார்ந்தவர்கள் அல்லோம். எம்பெருமான் திறத்திலே ஈடுபட்டு அவனைப் பெறாமல் வருத்தப்படுவதற்காகவே நம்மை ஈச்வரன் வைத்துள்ளான். ஆகவே நாம் மூன்றாம் விபூதியாகிறோம் என்கிறார். இருள்தரும் இந்த மாநிலத்தில் இருந்து கொண்டே எம்பெருமான் திறத்தில் ஈடுபடும் பக்தர்களுக்கு எப்பொழுதும் துன்பமே நிற்கும். "எய்த்துக் கும்பிடு நட்டமிட்டெழுந்து ஆடிப் பாடி இறைஞ்சி, மொய்த்துக் கண்பனி சோர மெய்கள் சிலிர்ப்ப ஏங்கி இளைத்தே' நிற்பர்

இவர்கள். ஆகவே இவர்கள்தாம் மூன்றாம் விபூதியைச் சார்ந்தவர்கள்; மூன்றாம் விபூதியும் இவர்களே என்றபடி,

ஒரு நாள் நள்ளிரவில் யமுனைக்கரையில் கண்ணனை நாடி வந்த கோபியர் அவனை விட்டுப் பிரிந்து மிகவும் வருந்துகின்றனர். அப்பொழுது அவர்கள் திருவாக்குகளிலிருந்து கீதம் பிறக்கிறது. இந்த இடைச்சிகள் பாடும் பாட்டு மகரிஷிகளுக்குங் கூடச் சாந்தியைத் தருகிறதாம். அந்த நள்ளிரவில் ஊரில் இடையர்கள் யாவரும் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கின்றனர். கண்ணன் அவதரித்த பிறகு நெய்யும் பாலும் மிகவும் அதிகமாகக் கிடைக்கின்றன அவர்களுக்கு. அவற்றைக் கொண்டு பணம் பண்ணி நிம்மதியுடன் வாழ்கின்றனர் அவர்கள். கண்ணனிடம் பக்தி கொண்ட இந்தப் பெண்களோ அவனை நாடி வந்து அவனைப் பிரிந்து, அவனைத் திக்குத்தோறும் அந்தக் காட்டில் தேடித் திரிகின்றனர். ஊரில் இருக்கும் பாமரர்கள் நிம்மதியுடன் உறங்குகின்றனர். "உன்னிடம் பக்தி கொண்ட நாங்களோ அலைந்து திரிகிறோம், காணாய் கண்ணா' என்கிறார்கள். பக்தர்களின் அவல நிலையை அபலைகள் வெளியிடுகின்றனர்–

जयति तेऽधिकं जन्मना व्रजः श्रयत इन्दिरा शश्वदत्र हि ।

दयित! दृश्यतां दिक्षु तावकास्त्वयि धृतासवस्त्वां विचिन्वते ॥

ஜயதி தேதிகம் ஜந்மநா வ்ரஜ:

ச்ரயத இந்திரா சாச்வதத்ர ஹி ।

தயித! த்ருச்யதாம் திக்ஷு தாவகா:

த்வயி த்ருதாஸவஸ் த்வாம் விசிந்வதே ||

இங்கு வியாக்கியானத்தைக் காண வேண்டும்:-

सर्वस्मिन् व्रजे मोदमाने, अत्र त्वदीयाः वयं तु त्वयि निमित्ते विषीदामः इति वदन्ति ।

"உன் அவதாரத்தினால் ஆயர்பாடிச் செல்வம் மல்கிக் கிடக்க, அதைப் பெற்று மற்றவர்கள் மகிழ்ந்திருக்க, உன்னைச் சார்ந்த, உன்னிடம் பக்தி கொண்ட, உன்னேயே உயிராகக் கொண்ட நாங்கள் மட்டும் பெரிதும் வருந்துகிறோம், திசை தோறும் ஓடி உன்னேத் தேடுகிறோம், காணாய். இதற்கு நீயே காரணம்" என்று பக்தர்களின் நிலையைக் காட்டுகின்றனர். ஆகவே இந்தக் கோபியரும் இவர்களை அடியொற்றிய ஆழ்வார்களுமே "மூன்றாம் விபூதி" ஆவர்.

---